BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

பாரதி வசந்தனின் தலைநிமிர்வில் தலித்தியப் பார்வை

முனைவர் கி. அய்யப்பன்
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,
உ. நா. அரசினர் கல்லூரி, பொன்னேரி- 601204
பேசி: 9962660279
மின்னஞ்சல்: agniiyyappan@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

பாரதி வசந்தன் என்கிற ப. அன்பழகன் புதுச்சேரியைச் சேர்ந்த நெல்லித்தோப்பில் 3.10.1956 அன்று பிறந்தவர். 25க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி, தொடர்ந்து தன் பங்களிப்பைச் செய்து வந்தார். தம் படைப்புகளுக்காக பரிசுகளையும், விருதுகளையும் பெற்றிருக்கும் இவர் இலக்கிய முன்னோடிகள் பலராலும், இலக்கிய அமைப்புகளாலும் பெரிதும் பாராட்டப்பட்டார். தலை நிமிர்வு என்னும் கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகளில் பெரும் பாலான கவிதைகள் பெரு வாரியான இதழ்கள் வெளியிட மறுத்தன. காரணம் கவிதைகளின் உண்மைத் தன்மையும், கலகக் குணமும் ஆகும். பாரதி வசந்தனின் துணிவு பாராட்டிற்குரியது. ஒரு கவிஞராக பேசத் தொடங்கிய பாரதி வசந்தன் இத் தொகுப்பின் மூலம் ஒரு தமிழனாகவும் பேசியுள்ளார். ஒரு தலித்தாகவும் பேசியுள்ளார். ஒரு மனிதனாகவும் பேசியுள்ளார். சமுதாயத்தில் தலித்துகளின் நிலையை பதிவு செய்வதுடன், அடக்கு முறைக்கு எதிராக கூக்குரலிடுகிறார். எவரிடமும் வணங்காமல் தலை நிமிர்ந்து நிற்கிறார். எல்லோரையும் தலை நிமிர்ந்து நிற்கவும் செய்கிறார்.

குறிச்சொற்கள்

பாரதி வசந்தன், தலைநிமிர்வு, தலித்தியம், புதுச்சேரி, நெல்லித்தோப்பு, அன்பழகன்

முன்னுரை

இலக்கியம் என்பது கவிஞனின் உணர்ச்சி வெளிப்பாடு. உள்ளத்து எழும் உணர்வுகளை உணர்ச்சி பீறிட வெளிப்படுத்தும் கருவிகளுள் தலையாயது கவிதை எனலாம். காலந்தோறும் தமிழ்க் கவிதைகள் பல்வேறு வடிவங்களாக, பல்வேறு பாடுபொருள்களைக் கொண்டு தோன்றிய வண்ணம் உள்ளது. அதில் ஒரு கூறு தலித்தியம் பற்றி பேசுவது. தலித்திய கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் பாரதி வசந்தன். மனிதர்க்குக் கொள்கை அவசியம். கொள்கையற்ற மனிதர் வாழ்தல் கூடாது. `கவிஞர்களிலும் கொள்கையோடு ஒன்றியும், மாறுபட்டும் இருப்பவர்கள் உண்டு. ஒரு கவிஞராக கொள்கையை விடாதும் மாறாதும் எழுதியும், இயங்கியும் வருபவர் கவிஞர் பாரதி வசந்தன். 'முப்பது ஆண்டு கால கவிதை வாழ்வின் வெள்ளை அறிக்கை' என்னும் அறிவிப்புடன் கவிஞர் தந்திருக்கும் கவிதைத் தொகுப்பு 'தலை நிமிர்வு'. வெள்ளை அறிக்கை என்பது உண்மை நிலையை நேர்மையுடன் அரசு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியதாகும். ஆனால், ஒரு கவிஞர் வெள்ளை அறிக்கை என்னும் தலைப்பில் கவிதைத் தொகுப்பு வெளியிட்டிருப்பது அவரின் நேர்மையையும், துணிவையும் காட்டுகிறது. ஆகவே, இவரின் தலைநிமிர்வு கவிதைத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள தலித்திய கவிதைகள் எவ்வாறு பேசப்பட்டுள்ளது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

பாரதி வசந்தன்: வாழ்க்கைக் குறிப்பு

பாரதி வசந்தன் என்கிற ப. அன்பழகன் புதுச்சேரியைச் சேர்ந்த நெல்லித்தோப்பில் 3.10.1956 அன்று பிறந்தவர். பெற்றோர் பெயர் இ. பழனி - புட்லாய் அம்மாள். 70களில் தொடங்கி சிறுகதைகள், குறுநாவல்கள், நாவல்கள், கவிதைகள், கட்டுரைகள், புத்தக விமர்சனங்கள், ஹைக்கூ கவிதைகள், மொழிபெயர்ப்புகள், சிறுவர் இலக்கியம், தலித்

இலக்கியம் என்று தமிழின் பல்வேறு இலக்கியப் பரிமாணங்களில் 25க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி, தொடர்ந்து தன் பங்களிப்பைச் செய்து வந்தார். தம் படைப்புகளுக்காக பரிசுகளையும், விருதுகளையும் பெற்றிருக்கும் இவர் இலக்கிய முன்னோடிகள் பலராலும், இலக்கிய அமைப்புகளாலும் பெரிதும் பாராட்டப்பட்டார்.

தலை நிமிர்வு என்னும் கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகளில் பெரும் பாலான கவிதைகள் பெரு வாரியான இதழ்கள் வெளியிட மறுத்தன. காரணம் கவிதைகளின் உண்மைத் தன்மையும், கலகக் குணமும் ஆகும். பாரதி வசந்தனின் துணிவு பாராட்டிற்குரியது. ஒரு கவிஞராக பேசத் தொடங்கிய பாரதி வசந்தன் இத் தொகுப்பின் மூலம் ஒரு தமிழனாகவும் பேசியுள்ளார். ஒரு தலித்தாகவும் பேசியுள்ளார். ஒரு மனிதனாகவும் பேசியுள்ளார். சமுதாயத்தில் தலித்துகளின் நிலையை பதிவு செய்வதுடன், அடக்கு முறைக்கு எதிராக கூக்குரலிடுகிறார். எவரிடமும் வணங்காமல் தலை நிமிர்ந்து நிற்கிறார். எல்லோரையும் தலை நிமிர்ந்து நிற்கவும் செய்கிறார். இத்தகைய பெருமகனார் 07.12.2024 அன்று இயற்கை எய்தினார். இவரின் இழப்பு தமிழுலகிற்கு ஈடுசெய்யமுடியாத இழப்பு ஆகும்.

எழுத்தாளனாய் பிரகடனம்

கவிஞர் பாரதி வசந்தன் தன் இலட்சியத்தையும், கொள்கையையும் கவிதைகளில் பிரகடனம் செய்கிறார். 'எழுது கோல் யுத்தம்' தலைப்பிலான கவிதையின் மூலம் தன்னிலையைத் தெரிவித்துத் தன் பயணத்தைத் தொடர்ந்துள்ளார். தன் தடத்திலிருந்து மாறாமல் எழுதியுள்ளார். எழுது கோல் யுத்தம் என்னும் தலைப்பே கவிஞர் நியாயமான போராட்டத்திற்காக களத்தில் நிற்பது தெரிகிறது.

"இலக்கியம் மக்கள் விடுதலைக்கே - என
எழுத்தில் கலகம் செய்பவன் நான்
இலக்கியம் போன்றே வாழ்ந்திருப்பேன்-ஆம்
இதுவே எனது பிரகடனம்"(தலை நிமிர்வு, ப. 26)

என்ற கவிதையில் தன் நிலையைப் பிரகடனம் செய்கிறார்.

மொழிப்போராளிகள் நடராசன், தாளமுத்து

தமிழ் மொழிக்கு ஏராளமானச் சிறப்புகள் உண்டு. அளவற்ற பெருமைகள் உண்டு. உலகில் ஒரு மொழிக்காக உயிர் விட்டுள்ளனர் என்றால் அது தமிழ் மொழிக்கே. ஒரு மொழிக்கானப் போராட்டம் நடந்துள்ளது என்றால் அது தமிழ் மொழிக்கே என்றால் மிகையில்லை. மொழிப் போராட்டத்தில் உயிர் விட்டவர்கள் என தாளமுத்து நடராஜன் எனப் பரவலாகப் பேசுகின்றனர், எழுதுகின்றனர். இது தவறு என்கிறார். காரணம் முதலில் பலியானவர் நடராசன் என்றும், இரண்டாவதாக தாளமுத்தும் என்று குறிப்பிட்டு, நடராசன் தாளமுத்து என்றே கூற வேண்டும் என்கிறார்.

"தாளமுத்து நடராசன் என்றாலும்
நடராசன் தாளமுத்து என்றாலும்
தமிழை அமிழ்து என்பதும்
அமிழ்தைத் தமிழ் என்பதும் போல
இரண்டுமே ஒன்றுதான்"(தலை நிமிர்வு, ப. 33)

ஏன்ற 'தமிழ் நெருப்பு' என்னும் கவிதை வரிகளில், நடராசன் தலித் ஆனாலும் தாளமுத்து நாடரசன் ஆனாலும் மொழிப் போராளியாகவே இருவரையும் பார்க்க வேண்டும் என்கிறார். இருவருக்கும் சாதி கிடையாது என்பதுடன் அவர்களைத் 'தமிழின் அடையாளம், தமிழரின் இன மானம்' என்றும் போற்றுகிறார். கவிஞர் ஒரு 'தமிழ் நெருப்பை' மூட்டியுள்ளார்.

சேரி- மக்கள் சேர்ந்து வாழ்தல்

தலித் என்பவர்கள் "தீண்டத்தகாதவர்களும், தீண்டாமைக்கு ஆளாகாவிட்டாலும் மிகுந்த துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உட்பட்டுச் சிதறிப்போயிருக்கும் சிறுபான்மையினரின் பிரதிநிதிகளும் ஆவார்கள்"(தமிழ் இலக்கிய வரலாறு, ப.538) என்று மு. அருணாசலம் கூறுவதைக் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. சேரி என்றால் பள்ளர், பறையர், சக்கிலியர் வாழும் பகுதி என அடையாளப் படுத்தப் பட்டுள்ளது. மற்றவர் தங்களை, உயர் சாதியினர் என அறிவித்துக் கொண்டு மேற்படி மூன்று வகையினரை ஒதுக்கி வைத்ததுடன் அவர்கள் வாழும் பகுதியையும் புறக்கணித்து வருகின்றனர்.

"சேரி எனில்/ மக்கள் சேர்ந்து வாழ்தலென"(தலை நிமிர்வு, ப. 37)

என கவிஞர் உணர்த்துகிறார். சேரி என்னும் பெயரில் மனிதர்களைப் பிரித்து வைத்திருப்பதைக் கண்டித்துள்ளார். சேரிகள் எத்தனைத் தமிழ் இலக்கியத்தில் இருந்துள்ளன எனப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

தலித் துரோகி

தலித்தியம் பற்றி இவர் எழுதினாலும், தலித் மக்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி சாடுகிறார். தலித்தாகப் பிறந்தவன் தலித்தாக வாழ வேண்டும் என்கிறார். தலித் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ள வேண்டும் என்கிறார். வேலையும் வசதியும் வந்தவுடன் தலித் என்னும் அடையாளத்தை மறப்பவர்களை 'துரோகி' என்று வசைபாடியுள்ளார்.

"அரசாங்க/உத்தியோகத்துக்குப் போனதும்
தகப்பன் பேர் சொன்னால்/தன்சாதி தெரியுமென்று
கை நிறைய/சம்பாதிக்கிறவளாய்ப் பார்த்து
கல்யாணம் செய்துகொண்டு/டவுனில் வீடெடுத்து
தலைமறைவாய் வாழ்கிறான்/காசுக்குப் பீ தின்ன
அம்பேத்கரையே/மறந்தவனுக்கு
அப்பனாவது/மசுராவது"(தலைநிமிர்வு, ப. 73)

என்று துரோகி என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில் தலித் மக்களுள் சிலர் தம்மை ஒரு தலித் என்று சொல்லிக் கொள்வதற்கே வெட்கப்படுவதைப் பதிவுசெய்கிறார். ஆனால் சில சாதிக்காரர்கள் சாதிப் பெயரைச் சொல்லியே ஆதாயம் தேடுகின்றனர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அந்த அளவிற்குச் சமூகத்தில் தலித்துகளுக்கான இடம் மறுக்கப்பட்டு இருப்பதை இக்கவிதை உணர்த்துகிறது. இங்ஙனம், தடுக்கப்பட்ட வார்த்தையாடல்களை, உச்சரிக்கக் கூசுகின்ற உயிர்ச் சொற்களை எல்லாம் கவிதையில் கொண்டுவந்து படைப்புகளாகியிருப்பது தலித் இலக்கியம் என்பதையும், அது பாரதி வசந்தனுக்குக் கைவந்திருக்கிறது என்பதையும் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

தமிழ்க்குடி- பறையன்

பறையர், தாழ்த்தப் பட்டவர் என்ற கருத்துப் பரவலாக உள்ளது. 'பறையன் - மனிதன் - தமிழன்' என்னும் கவிதை மூலம் அக் கருத்தை உடைத்துள்ளார். மாட்டுக் கறி தின்பவன் பறையன் என்றால், ஆதி சிவனும் பறையன் என்கிறார். நாட்டுப் புறக் கதையொன்றில் பதிவாயிருக்கும் இத் தகவலைக் கண்டறிந்து கூறியுள்ளார். ஒரு புதுக் கருத்தைப் பரப்பியுள்ளார். மேலும், அக்கவிதையில்,

"அவன் பறையன் இல்லை/எதுவும் இல்லை மனிதன்
அதுவும் எங்கள் தமிழன்/என்று சொல்ல
ஏனடா நாயே உங்கள்/ சாதி வெறி தமிழ்ப் புத்திக்கு
ஒரு நாளும் உரைக்கவில்லை"(தலை நிமிர்வு, ப. 144)

என்று எல்லோரையும் மனிதன் என்று அழைக்க வேண்டும் என்றும், அதிலும் தமிழன் என்றே அழைக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறார்.

பறையன் தமிழ்க்குடியே

'பறையன்' என்பதற்கு சென்னைப் பல்கலைக் கழக அகராதி 'தமிழன் ஒழிந்த பிற இனத்தான்' எனப் பொருள் தந்துள்ளது. இதனால் கோபமுற்று கவிஞர் 'தமிழ்க் குடி' என்னும் கவிதையில்,

"துடியன்/பாணன்/பறையன்/கடம்பன்
என்று/இந்நான்கல்லது/குடி
புறநானூறு/ சொல்லியும்/
தமிழன் ஒழிந்த/ பிற இனத்தான்
பறையன்/எனில்/ தமிழன் புத்தியை
செருப்பால்/அடி" (தலை நிமிர்வு, ப. 158)

என்று சங்க இலக்கியத்தில் புறநானூற்றில் கூறியுள்ள துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற நால்வகைக் குடிகளை எடுத்துக்கூறி, பறையன் தமிழன் அல்ல என்று சொன்னவனைச் செருப்பால் அடி என பொங்கியெழுகிறார்.

திருமா- தகப்பன் சாமி

தமிழர்கள் என்றால் பிரிந்துக் கிடப்பது போல் தலித்துகள் என்றாலும் பிரிவினையே. அம்பேத்கர் ஒருவரே தலித்துகளின் தலைவர். எனினும், அம்பேத்கர் பெயரிலேயே ஏராளமான கட்சிகளும், இயக்கங்களும், தலைவர்களும் உள்ளனர். அதில், விடுதலைச் சிறுத்தைகள்கட்சித் தலைவர் திருமாவளவனும் ஒருவர். அவரின் சில நடவடிக்கைகள் கவிஞருக்குப் பிடித்துள்ளது என்பதைச் சில கவிதைகள் வாயிலாக வெளிப் படுத்தியுள்ளார்.

"தகப்பன்தான் பிள்ளைக்குப் பேரை வைப்பான்
தகப்பனுக்கே பேர்வைத்த தகப்பன் சாமி"(தலை நிமிர்வு, ப. 47)

என்ற கவிதை வரிகளில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் பத்தாயிரம் இந்துப் பெயர்களை இனிய தமிழ்ப் பெயர்களாக மாற்றியதற்காக திருமாவளவனை 'தகப்பன் சாமி' என போற்றிப் பாடியுள்ளார்.

தொல். திருமாவளவன் அவர்களின் கால் நூற்றாண்டுக் களப் பணிக்காக, முப்பது ஆண்டுக் கால இவரின் கவிதை வாழ்வினை வெள்ளை அறிக்கையாக 'தலை நிமிர்வு' என்னும் இக்கவிதைத் தொகுப்பைச் சமர்ப்பித்துள்ளார். அடங்க மறு, அத்து மீறு, திமிறி எழு, திருப்பி அடி என்பது விடுதலைச் சிறுத்தைகளின் அடிப்படைக் கொள்கையாகும். வன்முறை என்று எவரோ சொன்னதற்கு எதிர் வினையாக எழுதப் பட்ட கவிதை 'உயிர் விலை'. அக்கவிதையில்,

"அது வன்முறை/இல்லையடா நாயே
வாழ்க்கை முறை" (தலை நிமிர்வு, ப. 56)

என்ற வரிகளில், அது வன்முறையல்ல, அது வாழ்க்கை முறை என்று கூறி புதிய போர் முறையைக் கூறுகிறார். விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக பேசியுள்ளார். விடுதலைச் சிறுத்தைகளின் அடையாளமான நீலம், சிவப்பு நிறங்களே தமிழைத் தலை நிமிரச் செய்யும் என்று கவிஞர் கூறுவது குறிப்பிடத் தக்கது.

தலித் எழுத்து

தலித் கவிதை என்பது "காலம் காலமாக அடிமைப்பட்டு ஒடுக்கப்பட்டுக் கிடந்த தலித் மக்கள் தற்போது வீறுகொண்டு எழுந்து போர்க் குரல் எழுப்புகின்றனர்."(ப.352) என்று ஸ்ரீசந்திரன் கூறுகிறார். மேலும், "தமிழில் தலித் கவிதை வெளிப்பாடுகள் விவாதிக்கப்படும் அளவிற்கு நூலாக்கம் பெறவில்லை."(ப.20) என்று கூறும் அ. ராமசாமியின் கருத்து கவனத்தில் கொள்ளத்தக்கன. பாரதி வசந்தனின் கண்ணோட்டத்தில் நான்கு வகை வருணங்களில் இருந்து ஒதுக்கி வைக்கப்படிருக்கும் பஞ்சமனின் எழுத்து ஆதி எழுத்து. அவன் எழுத்து கலக எழுத்து; அவன் பெயர் இப்போது தலித் எழுத்து.

"ஆதி எழுத்து/அவன் எழுத்து
அடிக்கு அடி/உதைக்கு உதை
ஆகா...வென்று எழுந்தது
கலக எழுத்து/அதன் பெயரே இப்போது
தலித் எழுத்து" (தலை நிமிர்வு, ப.27)

என்று பதிவு செய்கிறார்.

அப்பா- அம்மா- அம்பேத்கர்

பெரியார் கடவுள் இல்லை என்றார். பாரதி வசந்தன் இதை மறுத்து கடவுள் என்பது மெய்யானவை, எவராலும் மறுக்க முடியாதவை என்பதை 'தெய்வங்கள்' என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில்,

"கடவுள் இல்லையென்று எவனாவது
சொன்னால் சொல்லி விட்டுப் போகட்டும்
அப்பாவும் அம்மாவும்தான் எங்களுக்கு
ஆயிரங் காலத்துத் தெய்வம்
அதற்கடுத்தத் தெய்வம்/அம்பேத்கர்"(தலை நிமிர்வு, ப. 198)

என்கிறார். பெற்றோர் தெய்வம் என்பது பொதுவானது. அம்பேத்கர் தலித்துகளின் தெய்வம் என்பதை எடுத்துரைத்துள்ளார்.

தமிழ் ஒளி

புதுச் சேரியில் வாழ்ந்த பாரதியையும், புதுச் சேரியில் பிறந்த பாரதி தாசனையும் தமிழ்க் கூறும் நல்லுலகம் வெகுவாக அறியும். ஆனால், புதுச் சேரியில் பிறந்த ஒரு சிறந்த கவிஞரான தமிழ் ஒளியை பெரும் பாலோர் அறிய வாய்ப்பில்லை. 'தமிழ் ஒளி' என்னும் கவிஞனின் மீது ஓர் இருட்டுப் பாய்ச்சப் பட்டுள்ளது. கவிஞர் பாரதி வசந்தன் 'தமிழ் ஒளி' மீது ஒரு 'தமிழ் ஒளி' யைப் பாய்ச்சியுள்ளார். தமிழ் இலக்கிய உலகம் அறியச் செய்துள்ளார்.

"சேரியிலே பூத்ததொரு/சிவப்புப்பூ வசந்தம்- அவன்
சிந்தித்த அத்தனையும்/செங்கொடியை உயர்த்தும்
யாரிடமும் தலை வணங்கா
இனமான முழக்கம்/யாசித்தும் வாழ்ந்ததில்லை
இது அவன்கதைச் சுருக்கம்"(தலை நிமிர்வு, ப. 152)

எனும் கவிதையில் கவிஞர் தமிழ் ஒளியின் வாழ்வுச் சுருக்கத்தை எட்டே வரியில் சுருக்கிக் கூறியுள்ளார். சிறப்பாகச் சொல்லியுள்ளார்.

திருவள்ளுவர்

திருவள்ளுவர் எந்த சாதி என்று தெரியாது. ஆனால், அவருடையத் திருக்குறள், சாதி பேதமற்று எல்லோராலும் போற்றப் படுகிறது, பாராட்டப் படுகிறது, பின் பற்றப் படுகிறது. ஆராய்ச்சி என்னும் பெயரில் அறிஞர்கள் சிலர் திருவள்ளுவரை வள்ளுவர் என்று சுருக்கி பறையர் இனத்தில் உள்ள வள்ளுவப் பிரிவுடன் சேர்த்து 'வள்ளுவப் பறையன்' என திருவள்ளுவரை ஓர் இனத்திற்கு உரியவராக விட்டனர். கவிஞருக்கு இதில் உடன் பாடில்லை. இதனை, 'அறிஞர்' என்ற கவிதையில்,

"இரண்டாயிரம் ஆண்டுகளாக/வள்ளுவர் தமிழர்
இப்போது பறையர்" (தலை நிமிர்வு, ப. 51)

எனச் சொல்லுவதை ஏற்க முடியாது என்கிறார். மேலும், திருவள்ளுவரை வள்ளுவப் பறையன் என ஆக்க முயன்ற அறிஞர்களைச் சாடி, விமரிசித்துள்ளார்.

சாதித் திமிரும் மத வெறியும்

தமிழன் மூத்த குடி என்று பெயர் பெற்றவன். தொன்மையானவன் என்று அறியப் பட்டவன். இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு மேலான பண்பாடு பெற்றவனாகத் தமிழன் இருந்தாலும், இன்றும் தமிழன் தலை நிமிர்ந்து வாழ முடியவில்லை. இதற்கு முக்கியக் காரணமாகக் கவிஞர் கூறுவது "சாதித் திமிரும் மத வெறியுமே" என்கிறார். சாதித் திமிரும் மதவெறியும் மனிதர்க்குக் கூடாது என்கிறார். சாதியையும் மதத்தையும் துறந்து தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என 'தலை நிமிர்ந்து' கூறுகிறார். தமிழன் நிலையையும் தலித் மக்களின் நிலையையும் எடுத்துரைத்து, தன் நிலையையும் புரியச் செய்துள்ளார். வடிவங்களிலும் கவனம் செலுத்தியுள்ளார். 'தமிழா உனக்கொரு சேதி' என்னும் கவிதை 'குறும்பா' என்னும் வடிவில் எழுதப் பட்டுள்ளது. ஆங்கிலத்தில் லிமரிக் என்பதாகும்.

"இமயம் வென்ற வீரம்
இருந்தது முன்பொரு காலம்
சமயம் பார்த்தே/சாதிகள் வளர்ப்பாய்
சரிதான் உன் செயல் சோரம்"(தலை நிமிர்வு, ப. 88)

என்ற கவிதை வரிகளில் தமிழனின் முந்தைய நிலையையும் தற்போதைய நிலையையும் இக் குறும்பா மூலம் அறியச் செய்துள்ளார்.

தலித், தமிழ், தமிழ்நாடு

கவிஞர் பாரதி வசந்தன், தலித்தியம், தமிழியம் என்னும் இரண்டு தளங்களிலும் இயங்கியுள்ளார். தலித்தாகப் பிறந்தவனுக்கு இந்த இரண்டும் வேண்டும் என்கிறார். தலித்தியத்தை முன்னெடுத்துச் செல்பவர்கள் போலியாக இருக்கக் கூடாது என்றும் எச்சரித்துள்ளார்.

"தலித்தியத்திற்கு/அம்பேத்கரியம்.
தமிழியத்திற்கு/பெரியாரியம்.
பொதுவுடமைக்கு/மார்க்சியம்.
தமிழ் நாட்டின்/விடுதலைக்கு
இந்த மூன்றும் அவசியம்"(தலை நிமிர்வு, ப. 159)

என்ற கவிதை வரிகளில் தலித், தமிழ், தமிழ் நாடு என மூன்றின் விடுதலைக்கும் வழி வகுத்து, அவ்வழியே நடக்கிறார். வெற்றிப் பெற ஒத்துழைப்பது அவசியம் என்கிறார்.

தலித் குழந்தைகள் நிலை

தலித்துகளை ஒதுக்கி வைத்தல் என்ற நிலை குழந்தைகளிடமிருந்து தொடங்கப்படுகிறது என்கிறார். இதனை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ள,

"சேரித் தோட்டத்தில்/சீண்டுவாரற்றுப்
பூத்துக் கிடக்கும்/நாங்கள்!
.....
குழந்தைகள் ஆண்டு/கொண்டாடுவோரே!
நாங்களும்/இந்தத் தேசத்து
மழலைப் பூக்கள்தான்
எங்களுக்கு/எப்போது விழா
எடுக்கப் போகிறீர்கள்...?"(சின்னப்பறவையின் வண்ணச் சிறகுகள், 69-71)

என வரும் இக்கவிதையில் தலித் குழந்தைகளின் நிலையை மனக்குமுறலாக எடுத்துக்கூறுகிறார்.

மரணத்தை நேசிக்கும் மனிதர்கள்

மரணத்தை நேசிக்கும் மனிதர்கள் என்ற கவிதை இறந்தவர்களை அடக்கம் செய்கின்ற தலித் சமூகத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கையைப் பற்றியதாக உள்ளது. பணத்தை விரும்புகின்ற மக்களுக்கு மத்தியில், இவர்கள் ஒரு வேளைச் சோற்றுக்காக மரணத்தை நேசிப்பவர்களாக இருப்பதையும் விளக்குகிறது. அக்கவிதை, அதேபோன்று அவர் **வேண்டுதல்** என்னும் தலைப்பில் வித்தியாசமான பார்வையில் ஒரு தலித் கவிதை எழுதியிருக்கிறார். அதில்,

"சாதி வெறி பிடித்த/அயோக்கியன்
இறந்து போனான்
இருக்கும் வரை/சக மனிதனை
எட்டிப் போடா/என்று ஒதுக்கி வைத்த
அந்த/இழி பிறவியின்
எரி பிணத்தை/கிட்ட நின்று அடித்துத்

தன் பழி தீர்த்துக் கொண்டது
வெட்டியானின்/தடி
அடுத்த ஜென்மத்திலாவது
எதற்கும் உதவாத/கவியாகப் பிறக்காமல்
சாதியத்தை தவிடு பொடியாக்கும்
அந்தத்/தடியாகப் பிறக்க வேண்டும்" (பாரதி வசந்தன் படைப்புலகம், ப. 50)

என்று தலித் விடுதலைக்கான ஆவேசத்துடன் பாரதி வசந்தன் பதிவு செய்வது தமிழ்ப் படைப்புலகைப் பொறுத்த வரையில் இந்தப் பாடுபொருளில் இதுவே முதல் முறை. இது சாதியச் சமூகத்தில் காலம் காலமாக நிலவிவரும் தீண்டாமைக் கொடுமைக்கு எதிராகக் கலகம் செய்யக் கவிதையை ஆயுதமாக்கி இருக்கும் சிறந்ததொரு பதிவு. 'வெட்டியானின் தடியை சாதி ஒழிப்புக்கான கவிதைக் குறியீடாகச் செய்திருக்கும் பாரதி வசந்தனின் இந்தக் கவிதை தலித் இலக்கியத்தில் என்றும் நிலைத்திருக்கும்.' இவ்வாறு தமிழ்நாட்டில் தலித் இலக்கியம் "தலித் மக்களின் வாழ்வை, அவலத்தைச் சொல்வதாக மட்டுமில்லாமல், அவர்களின் வாழ்வியல் மாற்றத்திற்கான புதுத் தடங்களையும் அறிமுகப்படுத்திக்கொண்டே இருக்கிறது"(தலித் அறம், ப.54) என்கிறார் அரங்க மல்லிகா. இவர் கூறுவது போன்றே 'தலை நிமிர்வு' கவிதைத் தொகுப்பில் கவிஞர் பாரதி வசந்தன் தலித்தியம் சார்ந்த பல கவிதைகளைக் காணமுடிகிறது.

முடிவுரை

பாரதி வசந்தனிடம் கவிதையும் இருக்கிறது, கோபமும் இருக்கிறது என்பதற்குச் சான்றாக 'தலை நிமிர்வு' விளங்குகிறது. ஒரு கவிஞன் என்பவன் அநியாயத்தைக் கண்டு பொங்கி எழ வேண்டும். பாரதி வசந்தன் தலித்துகளின் உரிமைக்காகப் பொங்கி எழுந்துள்ளார். இக் கட்டுரை வழி காணலாகும் கவிதையிலும் கோபத்தைக் காண முடிகிறது. வேகத்தையும் உணர முடிகிறது. உடனுக்குடன் எதிர் வினையாற்றியுள்ளார். உணர்வுகளை வெளிப் படுத்தியுள்ளார். தவறு செய்பவர் எவராயினும், துரோகம் செய்பவர் எவராயினும் தட்டிக் கேட்கத் தயங்கியதில்லை. எதிரிகளை விட துரோகிகளையே தாக்கியுள்ளார். எழுதிய நாள், நேரம் மூலம் உறுதிப் படுத்தியுள்ளார். களத்தில் நிற்கும் போராளி போல் பாரதி வசந்தன் எழுத்தில் ஒரு போராளியாக உள்ளார்.

துணை நூற் பட்டியல்

அய்யப்பன், முனைவர் கி. பாரதி வசந்தன் படைப்புலகம், கலைஞன் பதிப்பகம், சென்னை, 2018.
அருணாசலம், முனைவர் மு. மற்றும் இராஜா வரதராஜா, தமிழ் இலக்கிய வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2022.
அரங்க மல்லிகா, தலித் அறம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2011.
பாரதி வசந்தன், சின்னப் பறவையின் வண்ணச் சிறகுகள், திருமகள் நிலையம், சென்னை, 1987.
பாரதி வசந்தன், தலை நிமிர்வு, அகநாழிகை பதிப்பகம், மதுராந்தகம், 2010.
ராமசாமி, அ. மையம் கலைந்த விளிம்புகள், ஆழி பப்ளிஷர்ஸ், சென்னை,2008.
ஸ்ரீசந்திரன், ஜெ. தமிழ் இலக்கிய வரலாறு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1998.

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.